**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 142/2014**
**மற்றும்**
**அசல் வழக்கு எண். 180/2017**
**நாள் 12/02/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – முனுசாமி | த/பெயர் – ஜெயராமன் |
| வயது – 43 | தொழில் – |
| விலாசம் – பெரவள்ளூர் கிராமம் | |

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரனை தொடர்ச்சி

1. பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தில் வீடும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ல் எங்களுக்கு விற்பனை செய்த ஆறுமுகம் வாரிசு சன்று இணைக்கப்பட்டுள்ளதா என்றால் அந்த சான்றின் எண் மட்டும் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆறுமுகத்தின் வாரிசு சான்று உள்ளது. ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதனுடைய எண் பதிவு செய்யப்பட்டுள்ளதால் தாக்கல் செய்யவில்லை. ஆறுமுகத்தின் இறப்பு சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு சான்றுகளை தாக்கல் செய்யாததற்கும், அதனை பொருத்து குறிப்பிடாததற்கும் காரணம் என்ன என்றால் அது பற்றி தெரியவில்லை. ஆறுமுகத்தின் வாரிசு சான்று தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான்

குறிப்பிடும் ஆறுமுகத்தினுடைய வாரிசு சான்றி எண் போலியானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் நான் வசிக்கும் இடத்திற்கும் சுமார் 200 மீட்டர் இடைவெளி இருக்கும். வழக்கு சொத்திற்கு சக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு விற்பனை செய்த நபர்கள் வழக்கு சொத்தினை அனுபவம் செய்ததற்கான ஆவணம் கொடுத்தார்களா என்றால் என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை. நான் வழக்கு சொத்து இருக்கும் இடத்தில் எனக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. அந்த வீட்டில் பிறந்ததிலிருந்து வசிக்கிறேன். நான் வழக்கு சொத்தினை அனுபவம் செய்வதற்கு ஆதரவாக பட்டா, சிட்டா தாக்கல் செய்துள்ளேன். ஆறுமுகத்தின் வாரிசுகள் தான் என்னிடம் சொத்தை விற்பது குறித்து சொன்னார்கள். யாருடைய முன்னிலையில், எந்த இடத்தில் விற்பனை பேசி முடிக்கப்பட்டது என்றால் சென்னையில் ஆறுமுகம் வாரிசு தனிகவேல் வீட்டில் வைத்து அவர் முன்னிலையில் கிரையம் பேசி முடிக்கப்பட்டது அப்போது மற்ற வாரிசுகளும் இருந்தார்கள். சொத்தின் பூர்வீகம் மற்றும் பின்புலத்தை கேட்டு தெரிந்துக்கொண்டு தான் கிரையம் பெற்றேன். மேற்படி சொத்து ஆறுமுகத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவர் இறப்பிற்கு பிறகு இவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னார்கள். மேற்படி சொத்திற்கு ஆறுமுகத்தின் முன்னோர்கள் நபர்கள் மீது ஏற்பட்ட ஆவணங்கள் என்னிடம் காண்பிக்கவில்லை.

ஆறுமுகத்தின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் சொன்ன வார்த்தையின் நம்பி அதன் அடிப்படையில் கிரையம் பெற்றேன். அப்பாசாமி என்பவருக்கு பெருமாள், ரெங்கநாதன், பி.எஸ். சுப்பிரமணி ஆகிய மகன்கள் இருந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பற்றி தெரியாது. சர்வே எண்.43/1 0.24 செண்ட் மனைக்கு அப்பாசாமிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனை மறைத்து தான் எனக்கு கிரையம் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. எனக்கு விற்பனை செய்த வேலு மேற்படி சொத்தை 2011 ல் அளப்பதற்காக வட்டாட்சியரிடம் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த இடத்தை அளக்கக்கூடாது என்று பிரதிவாதி தாயார் காமாட்சியம்மாள் ஆட்சேபனை மனு செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. அந்த சொத்திற்கான பட்டா எண். 197–6, 197–7, 191–5 மற்றும் 183–4 என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை வட்டாட்சியர் அலுவலகத்தில் யூடிஆர்–ல் கொடுக்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் விற்பனை செய்தார்கள் என்றும் அதனுடன் ஆறுமுகத்தின் முன்னோர்க்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 20.08.2013 ல் பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் ஆறுமுகம் பேரில் ஏற்பட்ட பட்டாவினை ரத்து செய்ய ஆர்டிஓவிற்கு அறிவிப்பு

அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. பதிவு செய்யப்பட்ட உயில் ஆணத்தின் அடிப்படையில் இந்த வழக்கின் பிரதிவாதிகளின் முகவர் லோகநாதனுக்கு பொது அதிகாரப்பத்திரம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் விவரத்தை ஆறுமுகத்தின் வாரிசுகளிடம் தெரிவிக்கவில்லை. ஏன் தெரிவிக்கவில்லை என்றால் வாதி தேவையில்லாமல் பிரச்சினை செய்வதால் அவர்களிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் காவல் நிலையத்தில் லோகநாதன் புகார் கொடுத்தேன். அந்த விசாரனைக்கு லோகநாதன் வந்தார். அந்த லோகநாதனும் வழக்கு சொத்துள்ள கிராமத்தினை சேர்ந்தவர். அந்த லோகநாதனுக்கு பிரதிவாதிகள் பவர் கொடுத்து அதன் அடிப்படையில் அ.வ.எண்.180/2017 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு லோகநாதனை நன்றாக தெரியும் என்றும் இந்த பிரச்சினை ஆறுமுத்தின் வாரிசுகளுக்கு தெரிவிக்காமல் வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. லோகநாதன் என்ன வேலை செய்கிறார் என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் லோகநாதன் செட் போட்டு வைக்கோல் போர் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சொத்துவரி லோகநாதன் பெயரில் உள்ளது என்றால் சொத்துவரி லோகநாதன் பெயரில் உள்ளது ஆனால் அவர் அனுபவத்திற்கு வழங்கப்பட்டதா என்பதும், எந்த தேதியில் வழங்கப்பட்டது

என்பதும் எனக்கு தெரியாது. நான் ஆறுமுகத்திற்கோ, அவரின் வாரிசுகளுக்கோ, அவருடைய முன்னோருக்கோ பாத்தியம் இல்லாத சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வருவாய் துறையில் தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் நான் கிரையம் பெற்றுள்ளதால் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.180/17 தீர்ப்பாக வேண்டியது என்னுடைய வழக்கு தள்ளுபடி ஆகவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரனை இல்லை._**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**